கடிதம் எண். 5004/பரா.1/2008–1, நாள் 27.2.2008

அனுப்புநர்
திரு.க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்.

அய்யா,

பொருள். கிராம ஊராட்சிகள் – கிராம ஊராட்சிக் கணக்குகளை ஒழுங்குமுறைப் படுத்துதல் மற்றும் முறையாக பராமரித்தல் தொடர்பான வழிமுறைகள் – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

பார்வை. 1. அரசு ஆணை (நிலை) எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 17.8.2007.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரின் கடிதம் எண்.52964/2007/ பராஅ.1–4, நாள் 19.2.2008.

* * *

17.8.2007–ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் துறை, அரசாணை எண்.146–க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது.

திருத்தம்

மேற்கூறிய அரசாணையில் பத்தி 3–இல், "2. தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் / அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிராம ஊராட்சி கொடுப்புக் கணக்கு" என்ற தலைப்பில், (இ) பயன்படுத்தும் முறையில் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்குப் பதிலாக கீழ்க்கண்ட வழிமுறைகள் வெளியிடப்படுகிறது:-

"இ. பயன்படுத்தும் முறை–

இந்த கணக்கில் உள்ள நிதியினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான நுகர்வுக் கட்டணம் அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ஏதேனும் இருப்பின் அதற்கு செலுத்தவேண்டிய சேவைக் கட்டணம் ஆகியவற்றை செலுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். எனவே இந்த கணக்கிலிருந்து வழங்கப்படும் அனைத்து காசோலைகளுமே தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும்/அல்லது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு செலுத்தவேண்டிய தொகை தொடர்பாகவே இருத்தல் வேண்டும். தனது பெயரில் காசோலை மூலம் தொகை வழங்க அனுமதிக்கக்கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொடர்புடைய அனைத்து வங்கி கிளைகளுக்கும், இக்கணக்கிலிருந்து வழங்கப்படும் காசோலைகள் தமிழ்நாடு மின்சார வாரியம்/தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவை தொடர்புடையதுதான் என்பதையும் தனது பெயரில் காசோலை மூலம் தொகை வழங்க அனுமதிக்கக் கூடாது என்பதையும் உறுதிபடுத்தும் வகையில், தங்களுடைய பேரேடில்/கணினியில் உரிய பதிவு செய்து கொள்ளுமாறு எழுத்து மூலமாக உத்திரவிட வேண்டும். வழங்கப்படும் அனைத்து காசோலைகளிலும் "For payment to TNEB and / or TWAD Board only" என்று முத்திரையிடவேண்டும்.".

தங்கள் உண்மையுள்ள,

சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளருக்காக.